படுத்துவதில் உள்ள இடையூறுகள் ஆகியவைபற்றிய பல்வேறு கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருத்துரைகள் முற்றிலும் ஏட்டளவே ஆகும்; அறிக்கையிலிருந்து உருவான பலன் ஏதும் விளையாது எனலாம்.

திரு. ச. சங்குமுத்துத் தேவர்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே என்னுடைய பகுதியில் இனும் கிராமங்கள் சர்வே செய்யப் படாமல் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்களிலே புஞ்சைச் சாகுபடி செய்யப்படுகிறது. அந்த நிலங்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைக்கவேண்டு மென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மேலும் அந்த நிலங்கள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் இனும்தாரர்களுடைய அனுபவத்தில் இருப்பதாக அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்திருப்பதால், அவற்றை பஞ்சாயத்திலே ஒப்படைப்பதற்கும் விவசாயிகள் பயனடைவ தற்கும் அது தடையாகலாம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எனவே அப்படித் தடைகள் ஏற்படாமல் இருக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இனும் நோடிபிகேஷன் செய்தபிறகு அங்கே சர்வே வேலைகள் நிச்சயமாக நடைபெறும். அதன்பிறகு இவை நடக்கும்.

Tax on gases

*13 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether gas for use of catering is being taxed at source; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) புர்சேன், கால்கேஸ், இன்டேன் போன்ற எரி பொருள் வாயுக் களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை நிலையில் 7 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது.

THIRU N. DENNIS: As it is an essential domestic article, may I know from the Hon. Minister whether tax would be collected in such a way as to save the purchasers from tax burden?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே பலமுனை வரியாக இருந்தது, இந்த மாமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் ஒரு முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது.

நந்தியாலத்தில் மனு நீதித் திட்டம்

*14 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு, வாலாஜா வட்டம், நந்தியாலம் கிராமத்தில் 1969-70-ல் மனு நீதித்திட்டம் நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் எத்தனை மனுக்கள் இன்று வரை பரிசிலனை செய்யப்பட்டுள்ளன?